13.03.2025 CC 37/2021 PW1. சூசன் ஜோப்

கடந்த 01.12.2021ம் தேதி முதல் விசாரணை செய்யப்பட்டு குறுக்கு விசாரணை செய்யப்படாமல் இருந்த நிலையில் இந்நீதிமன்ற Crl.M.P.678/2024 dated 31.01.2025ன் படி கு.வி.மு.ச 1973பிரிவு 311ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அதன் அடிப்படையில் மேற்படி சாட்சி குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார்.

குற்றம் சுமத்தப்பட்ட நபர் தரப்பு குறுக்கு விசாரணை

குற்றம் சுமத்தப்பட்டவர் ஆஜர் இல்லை. மேற்படி ஆஜர் இன்மை நீதி நலன் கருதி கு.வி.மு.ச 1973 பிரிவு 317 (1) –ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது. குற்றம் சுமத்தப்பட்ட நபர் தரப்பு கற்றறிந்த வழக்கறிஞர் ஆஜர்

1. எனக்கும் குற்றம் சுமத்தப்பட்ட நபருக்கும் எத்தனை வருடங்கள் பழக்கம் என்றால், 2016ம் ஆண்டு இறுதியில் அல்லது 2017–லிருந்து தொலைபேசியில் பேசுவதில் இருந்து பழக்கம் ஏற்பட்டது. எங்கள் இருவருக்கும் இடையே நெருங்கிய நட்பு பழக்கங்கள் இல்லை என்றால், சரிதான். குற்றம் சுமத்தப்பட்ட நபர் அவரது வீட்டு நிகழ்ச்சிகளுக்கு என்னை அழைத்தாரா என்றால், சரிதான். நான் குற்றம் சுமத்தப்பட்ட நபர் வீட்டுக்கு சென்று வருவதும் குற்றம் சுமத்தப்பட்ட நபர் எனது வீட்டுக்கு வருவதும் வழக்கம் என்றால், சரிதான். இதனால் குற்றம் சுமத்தப்பட்ட நபர் எனக்கு ஒரு உறவுமுறை போல் ஆகிவிட்டார் என்றால், சரிதான்.

2. 2018 ஜனவரி மாதத்தில் நான் எனது வீட்டை புதுப்பிக்கும் பணிகள் செய்து வந்தேன் என்றால், சிறுசிறு வேலைகள் செய்து வந்தேன். மேற்படி வீடு புதுப்பிக்கும் காலக்கட்டத்தில் நான் குற்றம் சுமத்தப்பட்ட நபரின் வீட்டில் தங்கியிருந்தேன் என்றால், இல்லை. நான் குற்றம் சுமத்தப்பட்ட நபர் வீட்டில் 6 மாத காலங்கள் தங்கியிருந்தேன் என்றால், இல்லை.

3. எனக்கும் குற்றம் சுமத்தப்பட்ட நபருக்கும் எப்பொழுதில் இருந்து பேச்சுவார்த்தை இல்லாமல் இருந்தது என்றால், 2022 வருடத்திலிருந்து பேச்சுவார்த்தை இல்லை. குற்றம் சுமத்தப்பட்ட நபர் என்னுடைய வீட்டிற்கு எத்தனை முறை வந்திருப்பார் என்றால், பலமுறை வந்துள்ளதால் சரியாக ஞாபகம் இல்லை. குற்றம் சுமத்தப்பட்ட நபரின் மகனுக்கு தென்காசியில் இருந்து பெண் எடுத்து திருமணம் செய்தார்கள் என்றால், சரிதான். மேற்படி திருமணம் Simple –ஆக நடந்த திருமணம் என்றால், சரியல்ல. விமர்சையாக தான் நடந்தது.

4. குற்றம் சுமத்தப்பட்ட நபரின் மகளுக்கு கோயம்புத்தூர் பொள்ளாச்சியில் இருந்து 2018–ம் வருடம் அக்டோபர் மாதம் மணமகன் எடுத்து திருமணநிச்சயம் செய்யப்பட்டது என்றால், சரிதான். மேற்படி திருமண நிச்சயம் திருமணத்தில் போய் முடியவில்லை என்றால், சரிதான். மேற்படி திருமணம் நின்று போனதற்கு காரணம் குற்றம் சுமத்தப்பட்ட நபரின் மகள் வேறு ஒருநபருடன் காதலில் இருந்ததால் திருமணம் நின்றது என்றால், சரிதான். மேற்சொன்ன விவரங்கள் எனக்கு நன்கு தெரியும் என்றால், தெரியும்.

5. மேற்படி கோயம்புத்தூர் பொள்ளாச்சியில் உள்ள மணமகன் என்னுடன் பேசுவாரா என்றால், எனக்கு தமிழ் தெரியாத காரணத்தினால் அவர் எனது மகளுடன் பேசுவார். மேற்படி கோயம்புத்தூர் பொள்ளாச்சியில் உள்ள மணமகனிடம் நானும் எனது குடும்பத்தினரும் குற்றம் சுமத்தப்பட்ட நபரின் குடும்பத்தைப் பற்றி அவதூறாக அவரிடம் சொல்லியதன் காரணமாக குற்றம் சுமத்தப்பட்ட நபருக்கும் எனக்கும் பேச்சுவார்த்தை இல்லாமல் போய்விட்டது என்றால், சரியல்ல. அந்த திருமணம் நடைபெறாமல் போனதற்கு பின்பும் எனக்கும் குற்றம் சுமத்தப்பட்ட நபருக்கும் இடையே பேச்சுவார்த்தை இருந்து வந்தது என்றால், சரிதான்.

6. குற்றம் சுமத்தப்பட்ட நபரின் மகள் அவர் காதலித்த நபருடனே பதிவுத் திருமணம் செய்துக் கொண்டார் என்றால், அந்த விவரம் எனக்கு நேரடியாக தெரியாது. ஆனால் கேள்விப்பட்டேன். குற்றம் சுமத்தப்பட்ட நபரின் மகளின் குழந்தை பிறப்பிற்கும் மற்றும் அதைச் சார்ந்த நிகழ்ச்சிகளுக்கும் நான் கலந்துக் கொள்ளவில்லை என்றால், சரிதான்.

7. குற்றம் சுமத்தப்பட்ட நபரின் மகள் பல்மருத்துவர் என்றால், சரிதான். குற்றம் சுமத்தப்பட்ட நபரின் மகள் தற்சமயம் குளச்சலில் பல் மருத்துவராக கிளினிக் வைத்து நடத்தி வருகிறார் என்றால், சரிதான். குற்றம் சுமத்தப்பட்ட நபரின் உறவினர் வின்சென்ட் மற்றும் அவரது மனைவி இராணியை தெரியுமா என்றால், தெரியும். குற்றம் சுமத்தப்பட்ட நபர் அவரது உறவினரான வின்சென்ட் என்பவருக்கு பணம் தேவைப்பட்டதால் என்னிடம் இருந்து ரூபாய் 6 லட்சம் கடனாக வாங்கிக் கொடுத்தாரா என்றால், இல்லை.

8. 10.02.2020 அன்று என்னுடைய மகன் ஜிபு, மருமகன் நிஜில், மகள் ஜின்சி, கணவர் ஜோப் ஆகியோர்கள் குற்றம் சுமத்தப்பட்ட நபரின் வீட்டிற்கு சென்று மேற்படி

கடன் தொகைக்காக பிரச்சனை செய்து அங்கிருந்த சாமான்களை அடித்து உடைத்த காரணமாக குற்றம் சுமத்தப்பட்ட நபரின் கணவர் என் மீதும் எனது குடும்பத்தாரின் மீதும் குளச்சல் காவல்நிலையத்தில் புகார் கொடுத்து அதன் விசாரணையில் நாங்கள் இனிமேல் பணம் சம்மந்தமாக தொந்தரவு செய்ய மாட்டோம் என்று எழுதிக் கொடுத்தோம் என்றால், சரிதான் ஆனால் நான் எழுதிக் கொடுக்கவில்லை. எனது பிள்ளைகள் எழுதிக் கொடுத்தார்கள்.

9. மேற்படி சம்பவத்திற்கு பிறகும் நானும் குற்றம் சுமத்தப்பட்ட நபரும் பேசுவோமா என்றால், நாங்கள் இருவரும் மட்டும் பேசுவோம். குற்றம் சுமத்தப்பட்ட நபரின் கணவருக்கு வாயில் கேன்சர் உள்ள விவரம் மற்றும் உடல்நிலை சரியில்லாத நபர் என்ற விவரம் எனக்குத் தெரியுமா என்றால், தெரியும். ஆனால் கேன்சர் என்பது எனக்குத் தெரியாது ஆனால் வாயில் பிரச்சனை உண்டு.

10. குற்றம் சுமத்தப்பட்ட நபர் இல்லாத பொழுது வீட்டில் மேற்படி பிரச்சனை செய்த காரணத்தினால் குற்றம் சுமத்தப்பட்ட நபர் என்னிடம் பேசவில்லை என்றால், சரியல்ல. 20.10.2018 அன்று குற்றம் சுமத்தப்பட்ட நபரின் மகளுக்கு நடைபெற்ற திருமண நிச்சயத்திற்காக மணமகளுக்கு அணிய வேண்டி சில நகைகளை என்னிடம் இருந்து வாங்கி குற்றம் சுமத்தப்பட்ட நபர் அவரது மகளுக்கு அணிந்தார் என்றால், சரிதான். மேற்படி நகைகளை என்னிடம் திரும்பத் தராத காரணத்தினால் 2020ம் வருடம் மே மாதம் நான் குளச்சல் காவல்நிலையத்தில் குற்றம் சுமத்தப்பட்ட நபர் மீது புகார் தாக்கல் செய்தேன் என்றால், சரிதான்.

11. மேற்படி பிரச்சனைகள் மற்றும் அதைக் குறித்த காவல்நிலைய புகார்கள் இருந்த சமயத்திலும் குற்றம் சுமத்தப்பட்ட நபர் என்னிடம் பேசுவார் என்று பொய்யாக சொல்கிறேன் என்றால், சரியல்ல. நான் கொடுத்த நகைகளில் சில நகைகளை குளச்சல் ஜம்மாத் மூலம் என்னிடம் திரும்பக் கொடுத்தார்கள் என்றால், சரிதான். எனக்கும் குற்றம் சுமத்தப்பட்ட நபருக்கும் இடையே பேச்சுவார்த்தை இல்லாத காரணத்தினால் தான் அவர் ஜம்மாத்தில் உள்ள பெரியவர்கள் முன்னிலையில் என்னிடம் சில நகைகளை கொடுத்தார் என்றால், சரியல்ல. நாங்கள் பேசிக் கொண்டுதான் இருந்தோம்.

12. மேற்படி அனைத்து நகைகளை சேர்த்து திரும்பத் தராத காரணத்தினால் மாண்புமிகு குற்றவியல் நடுவர் நீதிமன்றம், இரணியலில் வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால், நான் ஜம்மாத்தில் வாங்கிய நகைகளை தவிர்த்து மற்ற

நகைகளுக்கு தான் வழக்கு தாக்கல் செய்தேன். மாண்புமிகு குற்றவியல் நீதித்துறை நடுவர், இரணியல் உத்தரவின் பேரில் குளச்சல் காவல்நிலையத்தில் இது சம்மந்தமாக எங்கள் இருதரப்பினர்களையும் விசாரணை செய்தார்கள் என்றால், சரிதான். இந்நாள் வரை மீதம் உள்ள நகைகளை நான் பெறவில்லை என்றால், சரிதான்.

13. மேலே சொல்லியுள்ளது போல் பல பிரச்சனைகள் எங்கள் இருவருக்கும் இடையே நடந்து வருகிறது என்றால், சரிதான். நான் என்ன வேலை செய்கிறேன் என்றால், வேலை எதுவும் செய்யவில்லை. நான் வருமானவரி தாக்கல் செய்கிறேனா என்றால், இல்லை. இவ்வழக்கில் கூறியுள்ள தொகையை நான் எத்தனை தவணையாக குற்றம் சுமத்தப்பட்ட நபரிடம் கொடுத்தேன் என்றால், பல தவணையாக கொடுத்தேன். அது எத்தனை தவணை என்று என்னால் குறிப்பாக சொல்லமுடியவில்லை.

14. மேற்படி தொகைகளை நான் வங்கியின் மூலம் குற்றம் சுமத்தப்பட்ட நபருக்கு கொடுத்தேன் என்றால், பலமுறை கொடுத்துள்ளதால் அதில் சில முறை கையிலும் சில முறை காசோலையாகவும் சிலமுறை வங்கி பரிவர்த்தனைகள் மூலமாகவும் கொடுத்தேன். மேற்சொன்ன வங்கிப் பரிவர்த்தனைகள் 06.03.2017 முதல் 17.10.2018 வரை உள்ள எனது வங்கி கணக்குப் பட்டியலை பார்வையிட்டால் தெரியுமா என்றால், தெரியும்.

15. நான் எத்தனை வங்கிகளில் கணக்கு வைத்துள்ளேன் என்றால், 3 வங்கிக் கணக்குகள் எனது பெயரிலும் ஒரு வங்கிக் கணக்கு எனது மகனுடன் Joint Account வைத்துள்ளேன். மேற்சொன்ன கணக்குகளில் நான் குற்றம் சுமத்தப்பட்ட நபருக்கு எந்த வங்கிக்கணக்கில் இருந்து பணம் கொடுத்தேன் என்றால், எல்லா வங்கிக் கணக்கில் இருந்தும் கொடுத்தேன். மேற்படி 4 வங்கிக் கணக்குகளின் வங்கிப் பரிவர்த்தனைகளுக்கான 06.03.2017 முதல் 17.10.2018 வரையுள்ள கணக்கு பட்டியலை இவ்வழக்கில் தாக்கல் செய்யலாமா என்றால், செய்யலாம்.

16. என்னிடம் காட்டப்படும் முதல் விசாரணை வாக்குமூலத்தில் இவ்வழக்கு காசோலையானது போதிய பணம் இல்லை என்ற காரணத்தினால் திருப்பப்பட்டது என குறிப்பிடப்பட்டுள்ளது என்றால், சரிதான். வழக்கறிவிப்பிலோ, புகார்மனுவிலோ என்ன காரணத்திற்காக காசோலை திருப்பப்பட்டது என்ற காரணத்தை குறிப்பிட்டுச் சொல்லவில்லை என்றால், அதைப் பற்றி எனக்குத் தெரியாது. நான் எனது வழக்கறிஞரிடம் காசோலை சம்மந்தமான ஆவணங்களைக் கொடுத்தேன்.

17. இவ்வழக்கில் தாக்கல் செய்துள்ள புகார்மனு, வழக்கறிவிப்பு போன்ற ஆவணங்களில் என்ன விவரங்கள் உள்ளது என்ற விவரம் எனக்குத் தெரியுமா என்றால், தெரியும். அந்த ஆவணங்களை எனது வழக்கறிஞர் தான் தயார் செய்தார் என்றால், சரிதான். குற்றம் சுமத்தப்பட்ட நபர் என்ன காரணத்திற்கான என்னிடம் இருந்து பணம் பெற்றார் என்ற விவரம் சத்தியபிரமாண வாக்குமூலம் தவிர்த்து புகார் மனுவிலும், வழக்கறிவிப்பிலும் குறிப்பிடப்படவில்லை என்றால், சரிதான்.

18. குற்றம் சுமத்தப்பட்ட நபர் என்னிடம் எந்த பணமும் கடனாக பெறவில்லை என்றாலும், குற்றம் சுமத்தப்பட்ட நபருக்கும் எனக்கும் இடையே இருந்த நகை கொடுக்கல் வாங்கலில் பிரச்சனை இருந்த காரணத்தினால் இவ்வழக்கை நான் பொய்யாக தாக்கல் செய்துள்ளேன் என்றால், சரியல்ல.

19. இவ்வழக்கு காசோலையானது போதிய பணம் இல்லை என்று திருப்பப்படாமல் காசோலை வழங்கியவரை அணுகும் படிதான் திருப்பப்ட்டது என்றால், அதைப் பற்றி எனக்குத் தெரியாது. இவ்வழக்கில் தாக்கல் செய்துள்ள சங்கதிகள் எனக்கு முழுமையாக தெரியாது என்றும் எனது வழக்கறிஞர் தான் தயார் செய்து தாக்கல் செய்தார் என்றாலும், சரியல்ல.

20. என்னிடம் காட்டப்படும் Ex.P1 காசோலையில் குற்றம் சுமத்தப்பட்ட நபரின் கையொப்பத்தை தவிர்த்து மற்ற கையெழுத்துக்கள் வேறுபட்டுள்ளது என்றால், குற்றம் சுமத்தப்பட்ட நபரின் கையொப்பம் தமிழிலும் மற்ற கையெழுத்துக்கள் ஆங்கிலத்திலும் உள்ளது. குற்றம் சுமத்தப்பட்ட நபரின் கையொப்பமத்தில் உள்ள மையிற்கும் மற்ற கையெழுத்துக்களில் உள்ள மையிற்கும் வித்தியாசம் உள்ளதா என்றால், இல்லை.

21. நான் குற்றம் சுமத்தப்பட்ட நபருடன் நல்ல உறவில் இருந்த பொழுதும் அப்பொழுது அவரது வீட்டில் தங்கியிருந்த பொழுதும் குற்றம் சுமத்தப்பட்ட நபர் வங்கிக்கு லோன் சம்மந்தமாக தரவேண்டிய காசோலையை நான் எடுத்துக் கொண்டு பின்னர் பல ஆண்டுகள் கழித்து குற்றம் சுமத்தப்பட்ட நபர் மீது பொய்யாக தாக்கல் செய்துள்ளேன் என்றால், சரியல்ல.

22. குற்றம் சுமத்தப்பட்ட நபரின் மகனின் திருமணம் எளிமையாக நடந்த திருமணம் என்பதாலும், மேலும், அவரது மகளின் திருமணம் பதிவுத் திருமணம் என்பதாலும், மேலும் அவரது வீடு வங்கியில் கடன் வாங்கிக் கட்டிய வீடு என்பதாலும், மேலும் அவரது மகள் பல் மருத்துவராக இருந்து நன்கு வருமானம் ஈட்டும் நபர்

என்பதாலும் குற்றம் சுமத்தப்பட்ட நபருக்கு இவ்வழக்கில் கூறியுள்ள தொகையானது தேவைப்படாத தொகையாகும் என்பதால் குற்றம் சுமத்தப்பட்ட நபர் இத்தொகை என்னிடம் இருந்து கடனாக பெறுவதற்கு அவசியமும் தேவையும் ஏற்படவில்லை என்றால், சரியல்ல.

குறுக்கு விசாரணை முடிக்கப்பட்டது.

சாட்சி சொல்லி என்னால் எடுத்துச் சொல்லப்பட்டு, தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு, மேற்படி சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு அவரால் சரியானதென்று ஏற்கப்பட்டது.

நீதித்துறை நடுவர்,
விரைவு நீதிமன்றம்,
இரணியல்.